No. of Printed Pages : **11**

**5922**

**A**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# PART - III

# வேதியியல்/CHEMISTRY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 70

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 70

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

குறிப்பு : தேவையான இடத்தில் படம் வரைந்து, சமன்பாடுகளை எழுதவும்.

**Note :** Draw diagrams and write equations wherever necessary.

## பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

**1.** தனிம வரிசை அட்டவணையில், 15-ம் தொகுதி 3-ம் வரிசையில் உள்ள ஒரு தனிமத்தின் எலக்ட்ரான் அமைப்பு :

(அ) $1s^2 2s^2 2p^6 3s^2 3p^2$ (ஆ) $1s^2 2s^2 2p^4$

(இ) $1s^2 2s^2 2p^6 3s^2 3p^3$ (ஈ) $1s^2 2s^2 2p^3$

An element belongs to group-15 and 3rd period of the periodic table. Its electronic configuration would be :

(a) $1s^2 2s^2 2p^6 3s^2 3p^2$ (b) $1s^2 2s^2 2p^4$

(c) $1s^2 2s^2 2p^6 3s^2 3p^3$ (d) $1s^2 2s^2 2p^3$

**2.** பாக்ஸைட்டின் இயைபு :

(அ) $Al_2O_3 \cdot nH_2O$ (ஆ) $Fe_2O_3 \cdot 2H_2O$

(இ) $Al_2O_3$ (ஈ) இவை எதுவுமில்லை

Bauxite has the composition :

(a) $Al_2O_3 \cdot nH_2O$ (b) $Fe_2O_3 \cdot 2H_2O$

(c) $Al_2O_3$ (d) None of the above

**3.** ஒரு முதல் வகை வினையானது 60 நிமிடங்களில் 75% நிறைவு பெறுகிறது. அதே வினை, அதே நிபந்தனைகளில் 50% நிறைவு பெறத் தேவையான காலம் :

(அ) 35 நிமிடங்கள் (ஆ) 20 நிமிடங்கள்

(இ) 75 நிமிடங்கள் (ஈ) 30 நிமிடங்கள்

If 75% of a first order reaction was completed in 60 min, 50% of the same reaction under the same conditions would be completed in :

(a) 35 minutes (b) 20 minutes

(c) 75 minutes (d) 30 minutes

**4.** பின்வருவனவற்றுள் எந்த வினைக் காரணி நைட்ரோ பென்சீனை அனிலீனாக மாற்றுகிறது ?

(அ) ZnHg/NaOH (ஆ) $Zn/NH_4Cl$

(இ) Sn/HCl (ஈ) இவை அனைத்தும்

Which of the following reagent can be used to convert nitrobenzene to aniline ?

(a) ZnHg/NaOH (b) $Zn/NH_4Cl$

(c) Sn/HCl (d) All of these

**5.** $HO-CH_2-CH_2-OH$ -ஐ பெர்அயோடிக் அமிலத்துடன் வெப்பப்படுத்தும் போது உருவாவது :

(அ) மெத்தனல்

(ஆ) மெத்தனாயிக் அமிலம்

(இ) $CO_2$

(ஈ) கிளையாக்சால்

$HO-CH_2-CH_2-OH$ on heating with periodic acid gives :

(a) Methanal

(b) Methanoic acid

(c) $CO_2$

(d) Glyoxal

**6.** உலோக அயனியின் ஆக்ஸிஜனேற்ற எண் பூஜ்ய மதிப்பினைப் பெற்றிருக்கும் அணைவுச் சேர்மம் :

(அ) $K_4[Fe(CN)_6]$ (ஆ) $[Fe(CN)_3(NH_3)_3]$

(இ) $[Fe(CO)_5]$ (ஈ) (ஆ) மற்றும் (இ) இரண்டும்

A complex in which the oxidation number of the metal is zero is :

(a) $K_4[Fe(CN)_6]$ (b) $[Fe(CN)_3(NH_3)_3]$

(c) $[Fe(CO)_5]$ (d) Both (b) and (c)

**7.** பின்வருவனவற்றுள் எது லௌரி-ப்ரான்ஸ்டட் அமிலமாகவும், காரமாகவும் செயல்பட முடியும் ?

(அ) $HPO_4^{2-}$ (ஆ) HCl (இ) $Br^-$ (ஈ) $SO_4^{2-}$

Which of the following can act as Lowry-Bronsted acid as well as base ?

(a) $HPO_4^{2-}$ (b) HCl (c) $Br^-$ (d) $SO_4^{2-}$

**8.** போராக்ஸின் நீர்க் கரைசலானது :

(அ) காரத் தன்மை உடையது

(ஆ) நடுநிலைத் தன்மை உடையது

(இ) ஈரியல்புத் தன்மை உடையது

(ஈ) அமிலத் தன்மை உடையது

An aqueous solution of borax is :

(a) basic

(b) neutral

(c) amphoteric

(d) acidic

**9.** பின்வருவனவற்றுள் எது ஒருபடித்தான வினைவேக மாற்றத்திற்கு எடுத்துக்காட்டு ?

(அ) எண்ணெயின் ஹைட்ரஜனேற்றம்

(ஆ) ஹேபர் முறையில் அமோனியா தயாரித்தல்

(இ) நீர்த்த HCl முன்னிலையில் சுக்ரோசின் நீராற்பகுத்தல்

(ஈ) தொடு முறையில் கந்தக அமிலம் தயாரித்தல்

Which one of the following is an example for homogeneous catalysis ?

(a) Hydrogenation of oil

(b) Manufacture of ammonia by Haber's process

(c) Hydrolysis of sucrose in presence of dil.HCl

(d) Manufacture of sulphuric acid by Contact process

**10.** அசிட்டோனிலிருந்து சயனோஹைட்ரின் உருவாகும் வினை பின்வருவனவற்றுள் எதற்கு சான்றாக உள்ளது ?

(அ) எலக்ட்ரான் கவர் சேர்ப்பு வினை

(ஆ) கருகவர் பதிலீட்டு வினை

(இ) கருகவர் சேர்ப்பு வினை

(ஈ) எலக்ட்ரான் கவர் பதிலீட்டு வினை

The formation of cyanohydrin from acetone is an example of :

(a) electrophilic addition

(b) nucleophilic substitution

(c) nucleophilic addition

(d) electrophilic substitution

**11.** பின்வரும் ஆக்சிஜனேற்ற நிலைகளுள், லாந்தனாய்டுகளின் பொதுவான ஆக்சிஜனேற்ற நிலை யாது ?

(அ) +5 (ஆ) +4 (இ) +3 (ஈ) +2

Which of the following oxidation states is most common among the lanthanoids ?

(a) +5 (b) +4 (c) +3 (d) +2

**12.** ஃபாரடே மாறிலி __________ என வரையறுக்கப்படுகிறது.

(அ) ஒரு மோல் பொருளை விடுவிக்க தேவைப்படும் மின்னூட்டம்

(ஆ) 1 எலக்ட்ரானால் சுமந்து செல்லப்படும் மின்னூட்டம்

(இ) $6.22 \times 10^{10}$ எலக்ட்ரானால் சுமந்து செல்லப்படும் மின்னூட்டம்

(ஈ) 1 மோல் எலக்ட்ரானால் சுமந்து செல்லப்படும் மின்னூட்டம்

Faraday constant is defined as :

(a) Charge required to deposit one mole of substance

(b) Charge carried by 1 electron

(c) Charge carried by $6.22 \times 10^{10}$ electrons

(d) Charge carried by one mole of electrons

**13.** பின்வரும் அமினோ அமிலங்களில் எது சீர்மையுடையது ?

(அ) புரோலின் (ஆ) அலனின் (இ) கிளைசீன் (ஈ) லியுசின்

Which of the following amino acids are achiral ?

(a) Proline (b) Alanine (c) Glycine (d) Leucine

**14.** உலோக குறையுள்ள குறைபாடு காணப்படும் படிகம் :

(அ) ZnO (ஆ) NaCl (இ) KCl (ஈ) FeO

The crystal with a metal deficiency defect is :

(a) ZnO (b) NaCl (c) KCl (d) FeO

**15.** மூடுபனி என்பது எவ்வகை கூழ்மம் ?

(அ) வாயுவில் நீர்மம் (ஆ) வாயுவில் திண்மம்

(இ) நீர்மத்தில் வாயு (ஈ) வாயுவில் வாயு

Fog is colloidal solution of :

(a) liquid in gas (b) solid in gas

(c) gas in liquid (d) gas in gas

## பகுதி - II / PART - II

குறிப்பு : **ஏதேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **24-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **6x2=12**

**Note :** Answer **any six** questions. Question No. **24** is **compulsory**.

**16.** கனிமம் மற்றும் தாது ஆகியவற்றிற்கிடையேயான வேறுபாடுகள் யாவை ?

What are the differences between minerals and ores ?

**17.** $Fe^{3+}$ மற்றும் $Fe^{2+}$ -ல் எது அதிக நிலைப்புத் தன்மை உடையது ? ஏன் ?

Which is more stable $Fe^{3+}$ or $Fe^{2+}$ ? Why ?

**18.** அணைவு எண் – வரையறுக்கவும்.

Define Coordination number.

**19.** சகப்பிணைப்புப் படிகங்கள் – வரையறுக்கவும்.

Define covalent solids.

**20.** முதல் வகை வினைக்கான எடுத்துக்காட்டுகளை எழுதுக.

Give examples for the first order reaction.

**21.** அரீனியஸ் கொள்கையின் வரம்புகள் யாவை ?


What are the limitations of Arrhenius concept ?

**22.** மின்முனைக் கவர்ச்சி – குறிப்பு வரைக.

Write a note on Electrophoresis.


**23.** IUPAC பெயரினைக் குறிப்பிடுக.

(அ)
$$CH_3-\overset{\displaystyle CH_3}{\underset{\displaystyle CH_3}{\overset{|}{\underset{|}{C}}}}-OH$$

(ஆ) 

Give the IUPAC names :

(a)
$$CH_3-\overset{\displaystyle CH_3}{\underset{\displaystyle CH_3}{\overset{|}{\underset{|}{C}}}}-OH$$

(b) 

**24.** பின்வரும் வினைவரிசையில் உள்ள A மற்றும் B சேர்மங்களை கண்டறிக.

$$CH_3-Br \xrightarrow{NaN_3} A \xrightarrow{LiAlH_4} B + N_2$$

Identify A and B in the following sequence of reactions.

$$CH_3-Br \xrightarrow{NaN_3} A \xrightarrow{LiAlH_4} B + N_2$$

## பகுதி - III / PART - III

குறிப்பு : **ஏதேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **33-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **6x3=18**

**Note :** Answer **any six** questions. Question No. **33** is **compulsory**.

**25.** ஹாலஜனிடைச் சேர்மங்கள் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

What are interhalogen compounds ? Give examples.

**26.** இடைச்செருகல் சேர்மங்களின் பண்புகள் யாவை ?

What are the properties of interstitial compounds ?

**27.** அர்ஹீனியஸ் சமன்பாட்டினை எழுதி அதில் இடம் பெற்றுள்ளவற்றை விளக்குக.

Write Arrhenius equation and explain the terms involved.

**28.** மின்பகுளிக் கடத்துத்திறனை பாதிக்கும் காரணிகள் யாவை ?

What are the factors that affects electrolytic conductance ?

**29.** ஒருபடித்தான வினைவேக மாற்றம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

What is homogeneous catalysis ? Give example.

**30.** டை எத்தில் ஈதர் தயாரிக்கும் ஏதேனும் ஒரு முறையை எழுதுக.

Write any one method of preparation for diethyl ether.

**31.** ஹேலோஃபார்ம் வினையை எழுதுக.

Write Haloform reaction.

**32.** எபிமர்கள் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

What are Epimers ? Give example.

**33.** $[Ag(NH_3)_2]^+$ -ன் ஈனி, மைய உலோக அயனி மற்றும் IUPAC பெயரை எழுதுக.

Write the following for the complex $[Ag(NH_3)_2]^+$.

(a) Ligand (b) Central metal ion (c) IUPAC name

## பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5x5=25**

**Note :** Answer **all** the questions.

**34.** (அ) (i) புவி ஈர்ப்பு முறை – குறிப்பு வரைக.

(ii) நிக்கலைத் தூய்மையாக்கப் பயன்படும் மாண்ட் முறையினை விளக்குக.

**அல்லது**

(ஆ) (i) மந்த இணை விளைவு என்றால் என்ன ?

(ii) போரிக் அமிலத்தின் பயன்கள் யாவை ?

(a) (i) Write a note on gravity separation method.

(ii) Explain the Mond's Process of refining nickel.

**OR**

(b) (i) What is inert pair effect ?

(ii) What are the uses of boric acid ?

**35.** (அ) (i) ஆக்ஸிஜனின் பயன்கள் யாவை ?

(ii) சலவைத்தூள் எவ்வாறு தயாரிக்கப்படுகிறது ?

**அல்லது**

(ஆ) வெர்னர் கொள்கையின் கோட்பாடுகளைக் கூறுக.

(a) (i) What are the uses of oxygen ?

(ii) How will you prepare bleaching powder ?

**OR**

(b) Write the postulates of Werner's Theory.

**36.** (அ) படிக திண்மங்களை படிக வடிவமற்ற திண்மங்களிலிருந்து வேறுபடுத்துக.

**அல்லது**

(ஆ) (i) pH - வரையறுக்கவும்.

(ii) பொது அயனி விளைவை ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(a) Differentiate crystalline solids and amorphous solids.

**OR**

(b) (i) Define pH.

(ii) Explain common ion effect with example.

**37.** (அ) நெர்ன்ஸ்ட் சமன்பாட்டைத் தருவிக்கவும்.

**அல்லது**

(ஆ) வினைவேக மாற்றியின் சிறப்பியல்புகள் யாவை ?

(a) Derive an expression for Nernst equation.

**OR**

(b) What are the characteristics of catalyst ?

**38.** (அ) ஃபார்மிக் அமிலத்தின் ஒடுக்கும் பண்பினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) சிறுகுறிப்பு வரைக.

(i) கார்பைலமீன் வினை

(ii) காப்ரியல் தாலிமைடு தொகுப்பு

(a) Explain the reducing action of formic acid with example.

**OR**

(b) Write a note on :

(i) Carbylamine reaction

(ii) Gabriel phthalimide synthesis

**- o 0 o -**